


சாகமோடோவின் மீது நிகழ்த்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலுக்கு ஒரு மிக முக்கியமான காரணம் உண்டு. அவர் சும்மா சும்மா ஷோகோ அசஹாராவைப் போலிச் சாமியார் என்று சொல்லிக்கொண்டும், மக்களை அவருக்கு எதிராகத் திரட்டிக்கொண்டு இருந்ததும் மட்டுமல்ல; இன்னொரு காரணம், படு ஷார்ப்பானது.

நமது கதாநாயக வில்லப் பெருந்தகை ஷோகோ, அடிக்கடி அக்காலத்தில் ஒரு ஸ்டேட்மெண்ட் விடுவார். 'மக்களே, உங்கள் உடம்பில் ஓடுவதும் ரத்தம், என் உடம்பில் ஓடுவதும் ரத்தம் என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதுதான் இல்லை. உங்கள் உடம்பில் ரத்தம் ஓடலாம். என் உடம்பில் ஓடுவது அமிர்தம்.'

எப்படி இருக்கிறது கதை?

அவரது பக்தகோடிகளுக்கு இதனை நம்புவதில் பெரிய சங்கடங்கள் ஏதுமில்லை. ஷோகோ என்ன சொன்னாலும் அவர்களுக்கு வேதவாக்கு. யார் கண்டார்கள்? பாற்கடலைக் கடைந்து எடுத்த அமிர்தத்தை தேவர்களுக்குக் கொடுத்தது போக, மிச்சமிருந்ததை எம்பெருமான் ஷோகோவுக்குக் கொடுத்துவிட்டாரோ என்னவோ? அல்லது ஆலகால விஷத்தைக் குடித்த ஆதிபரமசிவன், தன் முதன்மை பக்தனுக்கு ஒரு குவார்ட்டர் அமிர்தத்தைக் கொடுத்து சியர்ஸ் சொல்லி சேர்ந்து குடித்தாரோ என்னவோ?

மக்கள் இதனைக் கேள்வி கேட்கவில்லை என்பது தெரிந்ததும் ஷோகோ, இந்த ரத்த மேட்டரை மிகத் தீவிரமாக பிரசாரம் செய்யத் தொடங்கினார். 'என் உடலில் ஓடும் ரத்தம் வேறு ஜாதி. உலகில் வேறெந்த மானிடப் பிறவிக்கும் இப்படிப்பட்ட ரத்தம் கிடையாது. இது ஏ, பி, பாசிடிவ், நெகடிவ் ரகங்களில் சேராது. இது தேவ ரத்தம். அல்லது தெய்வ ரத்தம்.'

சாகமோடோவுக்கு இதுதான் மிகவும் இம்சையளித்தது. 'மவனே, தில் இருந்தால் பப்ளிக்காக வந்து ஒரு ப்ளட் டெஸ்டுக்கு உன்னை உடன்படுத்து. நான் அருகில் இருப்பேன். இரு கட்சிக்கும் பொதுவான டாக்டர்கள் ரத்தத்தைப் பரிசோதிக்கட்டும். அது என்ன தேவ ரத்தம் என்று நானும் பார்த்துவிடுகிறேன்' என்று சவால் விட்டார்.

சவால் என்று வந்ததும் ஷோகோ சும்மா இருப்பாரா? ஜப்பானில் எத்தனை ஆயிரம் டாக்டர்கள் தன்னிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை பார்க்கிறார்கள் என்று ஒரு கணம் மனக்கண்ணில் ஓட்டிப் பார்த்தார். அப்படித் தன் எதிரி டாக்டரே ஒருவர் பரிசோதனைக்கு வந்தாலும் சரி பண்ணிவிட முடியும் என்று அவருக்குத் தோன்றியது. சிஷ்யர்களைக் கூப்பிட்டு நடக்கவிருக்கிற பப்ளிக் பரிசோதனை குறித்து விளக்கினார்.

'தக்க' ஏற்பாடுகள் செய்து வைக்கச் சொன்னார்.



ஹிதியோ முராய்

அக்டோபர் 31, 1989 அன்று அது நடந்தது. ஷோகோ அசஹாராவின் உடலிலிருந்து ஒரு சிரெஞ்ச் ரத்தம் உறிஞ்சப்பட்டு ஆய்வுச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இடையில் எந்தவிதமான மேட்ச் ஃபிக்சிங்கும் நடக்காதபடிக்கு உன்னதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஷோகோவின் சிஷ்யகோடிகள் ஆய்வுக்கூடத்தின் வெளியே தவித்துக்கொண்டிருந்தார்கள்.

ரத்தப் பரிசோதனை முடிந்து டாக்டர் மூக்குக்கண்ணாடியைக் கழற்றாமலேயே வெளியே வந்து சொன்னார், 'சாதாரண மானிட ரத்தம்தான். வெள்ளை அணுக்களும் சிவப்பணுக்களும் சரியான அளவில் உள்ளன. அமிர்தமோ, ஆவின் பாலோ, காப்பி டிகாக்ஷனோ கூடுதலாக ஏதும் இல்லை.'

ஒரு டாக்டர் இல்லை, ஏழெட்டுப் பேர் பரிசோதித்துவிட்டு, இதையே சொல்லிவிட்டார்கள். அதுநாள்வரை ஷோகோவுக்குச் சாதகமாக நியூஸ் போட்டு வந்த மீடியாக்களும் கூட, இந்த ரத்தப் பரிசோதனை விஷயத்தில் ஷோகோ பகவான் தோற்றுவிட்டதை முதல் பக்கத்தில் வெளியிட்டு வியப்பைத் தெரிவித்தன.

'சேதி கேட்டியா? சாதா ரத்தம்தானாம் அவருக்கு! என்னமோ சொன்னியே, ஸ்பெஷல் தேவ ரத்தம்னு? அதெல்லாம் ஒண்ணுமில்லியாம்.'

மூலைக்கு மூலை இதே பேச்சு. கிண்டல். உதட்டுச் சுழிப்புகளும் உருப்படாத விமர்சனங்களும்.

இந்தக் கடுப்புதான் சாகமோடோவைச் சாகடிப்பது என்கிற முடிவுக்கு அவர்களைக் கொண்டு சென்றது.

சரியாக மூன்றே நாள். நவம்பர் 3-ம் தேதி அது நடந்துவிட்டது. ஷோகோ அறிவியல்கூடத்தின் தலைமை விஞ்ஞானியாகப் பணியாற்றிக்கொண்டிருந்த ஹிதியோ முராய் (Hideo Murai), சடோரோ ஹஷிமோடோ (Satoro Hashimoto) என்கிற பீமபுஷ்டி பயில்வான் (வீரக்கலை வல்லுநர் என்று அவரைச் சொல்லுவார்கள்.), டோமோமாஸா நாககவா (Tomomasa Nakagava) என்கிற ஷோகோவின் நம்பிக்கைக்குரிய அடியாள் ஒருவன். மூன்று பேரும் சாகமோடோவின் வீட்டுக்குப் போனார்கள்.

அந்த லாயரைக் கடத்திக்கொண்டு வந்துவிடுவதுதான் அவர்களது ப்ளான். அவர் வெளியே புறப்படும் போது, வழியில் கத்தி அல்லது கபடா காட்டி அப்படியே அள்ளிப் போட்டுக்கொண்டு வந்துவிடுவது. பிறகு இஷ்டப் படி என்னவும் செய்து கொள்ளலாம் என்று திட்டம்.

ஆனால், அன்றைக்குப் பார்த்து விடுமுறை தினமாகிவிட்டபடியால், அது அவர்களுக்கு மறந்து விட்டபடியால், கடத்தல் திட்டத்தை விடுத்து, அப்படியே க்ளோஸ் பண்ணிவிட்டு வந்துவிடலாம் என்று முடிவு செய்தார்கள்.

சென்ற அத்தியாயத்திலேயே நாம் பார்த்துவிட்ட பொட்டாஷியம் க்ளோரைடு. மனைவி, குழந்தையுடன் அந்தப் பாவப்பட்ட வழக்கறிஞர்குடும்பத்தையே தீர்த்துவிட்டு, மூட்டைகட்டி ஆளுக்கொரு பக்கமாகக் கொண்டுபோய்ப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

வழக்கறிஞர் சாகமோடோ குடும்பப் படுகொலை, ஜப்பானில் மிகப்பெரிய அதிர்ச்சி அலைகளை உண்டாக்கியது. 'கண்டிப்பாக இது ஓம் இயக்கத்தவர்களின் வேலைதான்' என்று பல்லாயிரக்கணக்கானோர் அடித்துச் சொன்னார்கள். ஆனால், ஓம் ஆதரவாளர்கள் அதனைக்காட்டிலும் அதிக எண்ணிக்கையில் இருந்தபடியால், அப்போது ஒன்றும் செய்ய முடியவில்லை.

தவிரவும், ஷோகோவுக்கு இன்னொரு சௌகரியமும் இருந்தது.

1989-ம் ஆண்டுதான் ஷோகோ தன்னுடைய ஓம் ஷின்ரிக்கியோ இயக்கத்தை ஓர் அதிகாரபூர்வ மதமாக ஜப்பான் அரசால் ஏற்றுக் கொள்ளச் செய்யும் விதத்தில் வலுவான முயற்சிகள் மேற்கொண்டு வெற்றி பெற்றிருந்தார்.

ஜப்பானில் அதனை Religius Corporation Status என்று சொல்லுவார்கள். இயக்கம், இயக்கம் என்று அதுகாறும் சொல்லப்பட்டு வந்ததை, அதிகாரபூர்வமாக ஒரு மதமாக அங்கீகரித்து அறிவிப்பு வெளியிட்டிருந்தது, டோக்கியோ மெட்ரோபாலிடன் நிர்வாகம்.

மதம், மக்களின் நம்பிக்கைகள், கலாசாரம், பழக்கவழக்கங்கள், பிரத்தியேக விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றை மிகவும் மதிக்கிற சுபாவம் ஜப்பானியர்களுக்கு எப்போதுமே உண்டு. அரசாங்கம் இந்த விஷயத்தில் ஒருபோதும் மக்கள் மனம் புண்படக்கூடாது என்று நினைத்தது. மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் துளிக்கூட ரசாபாசங்களுக்கு இடம் கூடாது என்பது அங்கே எழுதாத சட்டம்.

ஷோகோவின் ஓம் இயக்கம் இப்படியொரு தனி மத ஸ்தாபக இயக்கமாக அரசால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டிருந்த நிலையில், மேற்படி வழக்கறிஞர் கொலை தொடர்பாக ஷோகோவிடமோ, இயக்கத்தின் தலைமை பக்தர்களிடமோ, சிஷ்யகோடிகளிடமோ விசாரணை என்று மணிக்கணக்கில் உட்காரவோ, ஆசிரமத்தில் ஆதாரம் தேட வாரண்ட் கொடுக்கவோ ஜப்பானிய நீதிமன்றமும் காவல் துறையும் தயங்கின.

சொல்லப்போனால், அம்மாதிரியான விசாரணைகளும் தேடுதல் வேட்டைகளும் ஜப்பானில் அத்துமீறல் என்றே கருதப்பட்டது.
இது ஷோகோவுக்குப் பரம சௌகரியமாகப் போய்விட்டது. தாடியை உருவிக்கொண்டு சிவசிவ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

இதென்ன அபத்தம் என்று தோன்றுகிறதா? எல்லாம் இரண்டாம் உலகப்போரின் முடிவுக்குப் பிறகு, ஜப்பானில் கொஞ்சநாள் கலாசாரம் வளர்த்துவிட்டுப் போன அமெரிக்கா செய்த காரியம். இரண்டாம் உலகப்போரில் ஜப்பானின் வீழ்ச்சிதான் இறுதிக்காட்சி என்பது தெரியுமல்லவா? ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களை ஒழித்துவிட்டு ஜப்பானையே தரைமட்டமாக்கிய பிறகு, அங்கே வேறு அரசு உருவாகி, புதிய சட்டதிட்டங்கள், புதிய வாழ்க்கை, புதிய ஆரம்பம் என்று தொடங்கிய நேரத்தில், ஜப்பானில் இருந்த அமெரிக்க அதிகாரிகள் தங்கள் பங்குக்குச் சிலவற்றை அங்கே மிச்சம் வைத்துவிட்டுப் போனார்கள்.

அவற்றில் ஒன்று, மதங்களுக்கு மரியாதை. எந்த மதத்தையும் இழிவுபடுத்தாதீர். எந்த மதத்தவரையும் புண்படும் விதத்தில் நடத்தாதீர். மதத்தலைவர்களை அவமானப்படுத்தும் சம்பவங்கள் நடக்கக்கூடாது. மத நிறுவனங்கள், மடாலயங்களில் காவல் துறையோ, ராணுவமோ நுழையாமல் இருப்பது நீண்டநாள் நோக்கில் தேச ஒற்றுமைக்கு நல்லது செய்யும்.

நல்ல கருத்துதான். எடுத்துக் கொள்வதில் என்ன பிரச்னை? இயல்பாகவே ஜப்பானியர்களுக்கு

இந்தக் குணம் உண்டு. யாரையுமே அவர்கள் புண்படுத்த விரும்பமாட்டார்கள். ஜப்பானிய காவல் துறை விசாரணைகள் கூட மிகவும் கௌரவமாக, குற்றவாளியின்மீது கைபடாமல்தான் இருக்கும்.

இதெல்லாம் நமது ஷோகோ முனிபுங்கவருக்கு சௌகரியமாகப் போய்விட்டன. 'கொலையா? நாங்களா? சிவசிவா' என்று சொல்லிவிட்டார். தனது ஆசிரமக் கதவுகள் எந்நேரமும் திறந்தே இருக்கும். யாரும் எப்போதும் வந்து விசாரிக்கலாம். என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்றும் சொல்லி வைத்தார்.

அதற்குப் பிறகு யார் வருவார்கள்?

இன்னொரு விஷயமும் கவனிக்க வேண்டியது. மேற்படி அரசு அங்கீகாரத்துக்கு முன்னால், ஓம் ஷின்ரிக்கியோவுக்கு ஜப்பானில் ஆயிரக்கணக்கில் இருந்த பக்தர் கூட்டம், அங்கீகாரத்துக்குப் பின்னால் லட்சக்கணக்கில் பெருகத் தொடங்கிவிட்டிருந்தது. வீதிக்கு ஒரு குடும்பமாவது ஓம் மதத்தைத் தழுவிக் கொண்டிருந்தது. எங்கும் ஓம். எதிலும் ஓம். தாடி வைத்த அந்த வெள்ளைத் தக்காளியின் புகைப்படம் இல்லாத சுவர்களே கிடையாது. உயர்மட்ட அரசு அதிகாரிகள், அமைச்சர்கள், காவல்துறை அதிகாரிகள், நீதிபதிகள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள் என்று சமூகத்தின் அனைத்துத் தரப்பிலும் ஓம் ஆதரவாளர்களும் பக்தர்களும் பல்கிப் பெருகிவிட்டிருந்தார்கள்.

1988-ம் ஆண்டு இறுதிக் கணக்கு முடிக்கும்போது, ஓம் ஷின்ரிக்கியோவின் சொத்து மதிப்பு 4.3 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. இதுவே அடுத்த வருஷம் அந்த அரசு அங்கீகாரத்துக்குப் பிறகு, 100 மில்லியன் டாலராக உயர்ந்துவிட்டது. எங்கிருந்து அப்படிப் பேய் மாதிரி பணம் வந்து கொட்டுகிறது என்று யாருக்குமே புரியவில்லை. ஆறு நாடுகளில் ஐம்பது கிளைகள். ஒவ்வொரு கிளையும் குறைந்தது வருடத்துக்கு இருபது லட்சம் டாலர்களாவது நிதி திரட்டிக்கொண்டிருந்தது.

ஷோகோவுக்குப் பெருமிதமும் சந்தோஷமும் பிய்த்துக் கொண்டது. தான் நினைத்ததை அடைந்து விடப்போகிறோம் என்று உறுதியாக அவர் நினைத்தார். அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்துத் தனக்கு நெருக்கமான உள் வட்டத்துடன் கலந்து பேசத் தொடங்கினார்.

ஆயுதங்கள் வரத் தொடங்கிவிட்டன. அவற்றைத் தக்க முறையில் பாதுகாக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. தாக்குதல் என்பதுதான் திட்டம். அதை எங்கிருந்து, எப்படித் தொடங்குவது என்பதுதான் பேசி முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

அதற்குள் இந்த வழக்கறிஞர் கொலை விவகாரம் வந்து கொஞ்சம் திசைதிருப்பிவிட்டது. இம்மாதிரி இன்னமும் கூட நிறைய வரலாம். பொதுவாழ்க்கையில் இதெல்லாம் சர்வ சாதாரணமானது. ஆனால், மக்களுக்குத் தம்மீது அசைக்க முடியாத நம்பிக்கையும் பக்தியும் இருக்கிறது, அது மாறவே மாறாது என்பதை நிரூபித்துவிட வேண்டும்.

யாருக்கு?
அரசாங்கத்துக்கு. அது முக்கியம். ஏனெனில், ஷோகோ தீர்மானித்திருந்த யுத்தமே அரசாங்கத்துக்கு எதிராகத்தானே? முதலில் ஜப்பானை வெல்வது. பிறகு உலகத்தை. அதுதானே செயல்திட்டம்?

என்ன செய்யலாம் என்று யோசித்தார். யுத்தத்துக்கு முன்னால் ஒரு ரவுண்டு தேர்தலில் நின்று பார்த்தால் என்ன என்று தோன்றியது. மக்கள் ஆதரவு! ஹ, தனக்கில்லாததா? யுத்தமேகூட இல்லாமல் முழு ஜப்பானையும் வசப்படுத்திவிட முடிந்தாலும் நல்லதுதானே?

சரி, வா விளையாடலாம் என்று களத்தில் இறங்க முடிவு செய்தார்.